முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2 கோடி ரூபாயை தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் வாயிலாக பெற்றுத் தந்திருக்கின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 12 ஆவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த பிரதி டம்மி ரிப்போர்ட் அளிக்கப்படுகிறது. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் அவைகள் உறுப்பினர்களுக்குத் தனித் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தமது திருத்தத்தை மொழியலாம்.

(†) 21-9-1992, ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.